**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.251/2023 |
| Prosecution Witness | : | **அ.சா.**3 |
| Name | : | **ராஜன்** |
| Father's / Husband Name | : | **சிவனேசன்பிள்ளை** |
| Address | : | **அயிலூர்** |
| Age | : | 55/2025 |

**தேதி : 17.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பத்திர எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியாது. பட்டியல் சாட்சி 2 மற்றும் அ.சா.2 ஐ தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும். பெரியசாமியை தெரியும். அவர் சார்பதிவாளராக பணிபுரிந்தார். 2011ம் ஆண்டில் பச்சமுத்து என்பவர் என்னிடம் ஒரு பவர் பத்திரத்தை கொடுத்து ஒரு கிரயபத்திரம் தயார் செய்து கொடுக்க சொன்னார். நானும் கிரய பத்திரம் தயார் செய்து கொடுத்தேன். பவர் பத்திரம் யார் பெயரில்இருந்தது என்றும், கிரய பத்திரம் யார் பெயரில் எழுதிக்கொடுத்தேன் என்றும் ஞாபகமில்லை. 2012ம் ஆண்டு நிலஅபகரிப்பு பிரிவு போலீஸார் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து நான் எழுதிக்கொடுத்த பத்திரம் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும் என்று என்னை அழைக்கும்போது விசாரணைக்கு ஆஜராகும்படி சொன்னார்கள். பத்திரத்தை காட்டி போலீஸார்

என்னிடம் நான் எழுதியதா என்று கேட்டார்கள். நான்தான் எழுதியதாக சொன்னேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 4 மற்றும் 6வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்போது நீதிமன்றத்தில் கூறிய சங்கதிகளைத்தான் போலீஸார் என்னை விசாரித்தபோதும் சொன்னேன் என்றால்சரிதான். நீதிமன்றத்தில் கூறிய சங்கதிகளை தவிர வேறு சங்கதிகள் என்னுடைய வாக்குமூலத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு, அதை பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக பத்திரம் தயார் செய்வதற்கு முன்பு சொத்து தொடர்பான வில்லங் சான்றிதழ் பார்த்து சரியாக இருந்தால்தான் பத்திரம் தயார் செய்வோம் என்றால் சரிதான். நான் பத்திரம் எழுதும்போது சரியாக இருந்ததால்தான் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் நான் பத்திரம் எழுதியபோது வில்லங்கம் பார்க்கவில்லை. பவர் பத்திரத்தில் உள்ள விவரங்களை வைத்து எழுதினேன். நான்பத்திரம் தயார் செய்த பின்பு பதிவு செய்வதற்கு முன்பு சார்பதிவாளர் அவருடைய அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களை பரிசீலனை செய்து சரியாக இருக்கும்பட்சத்தில் பத்திரத்தை பதிவு செய்வார் என்றால் சரிதான். நான் தயார் செய்த பத்திரம் சரியாக இருந்ததால்தான் சார்பதிவாளர் ஆவணங்களை சரிபார்த்து கொண்டு பதிவு செய்துகொண்டார் என்றால் சரிதான்.

**5வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்நீதிமன்ற வாக்குமூலத்தில் கூறியுள்ள பெரியசாமி சார்பதிவாளர் எப்படி தெரியும் என்றால் நான் பத்திர எழுத்தராக இருப்பதால் அவர் பெரம்பலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்ததால் அவரை தெரியும். பவர்பத்திரம் பதிவு செய்யும்போது நான் உடன் இல்லை. 5வது எதிரி அவருடைய

பணியைத்தான் செய்தார் என்றாலும், இந்த வழக்கிற்கும், அவருக்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியாது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.